4. அரசினர் தீர்மானம்

விதி 22—ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் ''வினாக்கள் விடைகள்,, என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 22 ஐ நாளை, 9-11-1979 அன்று தளர்த்தி, அந்த நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1. 29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(5) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

192. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் (திரைப்படங்கள்) 18-5-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1245 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

193. ஓரளவு நிரந்தரத்தன்மை வாய்ந்த திரையரங்குகளுக்கு உரிமம் வழங்குவது குறித்து தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் (திரைப்படங்கள்) 21-7-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1734 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

194. செய்தித் தொகுப்புத் திரைப்படங்களை தெருக்களிலும். பொது இடங்களிலும் திரையிடுவது தொடர்பாக, தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள்துறையின் (திரைப்படங்கள்)

1979 நவம்பர் 8]

31-8-1979 ஆம் தேதியிடப்பெற்ற 2172 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம்ஆண்டு திரைப்படச் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

195. தற்காலிகத் திரையரங்குகளுக்கு குறிப்பிட்ட மூன்றாண்டுகள் முடிந்த பின்னர் அதே இடத்தில் மீண்டும் உரிமம் வழங்குவது குறித்து தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் (திரைப்படங்கள்) 13-9-1979 ஆம் தேதியிடப்பெற்ற 2308 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

196. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் சர்சார்ஜ் டிஸ்அலவன்ஸ் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 9-7-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1047 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

197. செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவேற்காடு நகரியத்தை அமைப்பது குறித்த ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 27-6-1979 ஆம் தேதியிடப்பெற்ற 991 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) வது பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

* 50. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91. அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1979).

* 51. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாது காப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979).

6-11-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பபெற்றது.